## செயற்பொறியாளர் பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5

முன்னிலை : பொறி.சே.மணிகண்டன், எம்.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

**செயல்முறை ஆணை எண்.அ2/353/2021/ நாள். 29.06.2021**

அய்யா,

பொருள்: நியமனம் (நேரடி) – த.நா.அ.ப.தொகுதி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நட்டத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி IV–ல் 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுகளில் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்ட திருமதி தீ.மகாலட்சுமி, (பி.தே.01.07.1995) இளநிலை உதவியாளர், பதவியில் பணிவரன்முறை செய்தல் – தகுதிகாண் பருவம் துவக்கி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண்.2496/ PSD-I/2020, நாள்.29.05.2020.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்களின் செயல்முறை எண்.எஸ்.3(3)/35935/2020, நாள். 17.09.2020.
3. செயற்பொறியாளர் பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/346/2020, நாள்.23.09.2020.

****

பார்வை 1–ல் காணும் தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IV–ல் அடங்கிய 2018–2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2–ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்களால் தேர்வு செய்யப்பட்ட திருமதி தீ.மகாலட்சுமி, (பி.தே.01.07.1995) இளநிலை உதவியாளர், பார்வை–3ல் காணும் செயற் பொறியாளர் பொ.ப.து, கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் மூலம் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 23.09.2020 மு.ப. முதல் அவரது பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

| வரிசை எண். | பெயர்/பிறந்த தேதி | தேர்வாணைய வரிசை எண். | பணிபுரியும் அலுவலகத்தின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி தீ.மகாலட்சுமி 01.07.1995 | 59 | செயற் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை–05. | 23.09.2020 மு.ப |

இவரது பணி தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியின் இளநிலை உதவியாளர் பதவியில் 23.09.2020 மு.ப. முதல் தமிழ்நாடு அரசு சார்நிலை பணிகளுக்கான பொது விதிகளில் விதி எண்.23ஏ (1)—ன்படி இவர் பணியேற்ற நாளான 23.09.2020 மு.ப. முதல் பணிவரன்முறை செய்தும் ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை நாள் முதல் இவர்கள் தகுதிகாண் பருவ காலம் தொடங்கி மூன்றாண்டு தொடர் பணியின் இரண்டாண்டு பணிக்காலத்தில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகரில் நடைபெறும் தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட்டது என்கிற நிபந்தனையுடன் இப்பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து.,
கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம்,
சேப்பாக்கம், சென்னை—5.

29/6/2021

பெறுநர்
தனியர் ( இளநிலை உதவியாளர்)

நகல்:
1. கண்காணிப்பு பொறியாளர், பொ.ப.து., திட்டம் மற்றும் வ டிவமைப்பு வட்டம் (கட்டடம்), சேப்பாக்கம், சென்னை—05.
2. பணிப்புத்தகம்.
3. இருப்பு கோப்பு.